**கவனிக்க.-** இவ் வர்த்தமானி பகுதி VI இல் 2021 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2242 - 2021 අගෝස්තු මස 20 වැනි සිකුරාදා - 2021.08.20

*2242 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1702 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1703 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1705 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1700 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) யூஎன்வீ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2021, யூலை மாதம் 30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஓகத்து மாதம் 27ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1699- B 082260 - 405 (2021/08)

# ஆய விற்பனையும் குத்தகையும்

பி.செ./ நீர்/ 01/11/கள்ளுத்தவறணை-2022

## நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவு

## 2022 ஆம் ஆண்டிற்கான கள்ளுத் தவறணைகளுக்கான விலைமனு கேள்விப்பத்திரம்

1982, ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணைக்கான விலைமனு நிபந்தனைகள் மற்றும் தற்போது ஏற்புடைய மதுவரி உரிமம் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக கள்ளுத் தவறணை விற்பனை செய்வதற்கான கீழ்வரும் கள்ளுத் தவறணைகளுக்கு 2022, தை மாதம் 1 ஆந் திகதி முதல் 2022, மார்கழி 31 ஆந் திகதி வரையுமான தனியாள் உரிமையின் கீழ் விற்கப்படுவதற்கான விலைமனுக்கள் 2021.09.24ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. சகல கேள்விகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனு கேள்விப்பத்திரங்களை சரியான முறையில் பூரணப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புத் தொகையை செலுத்தி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், கள்ளு விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள சொத்துப் பத்திரத்தையும் , (சொத்துப் பத்திரம் தாங்கள் முன்வைக்கும் கேள்வி பெறுமதியில் 15% வீதத்திற்குக் குறைவாக இருத்தல் கூடாது). அதற்குரிய உறுதியின் பிரதியையும் வழங்க வேண்டும்.

3. முறையாக நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்கள் முத்திரையிடப்பட்ட தபால் உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் “இலக்கம் ....................குறிக்கும் ................கள்ளுத்தவறணைக்கான கேள்விப்பத்திரம்” என இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் விலைமனு கேட்கும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி 2021. 09.24 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலிலோ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரத்தில் மேற்கொள்ளும் திருத்தங்களை விலைமனுதாரரின் முழுக் கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2021.09.24 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளல் நிறைவடைந்தவுடன் பின் உடனே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். அத்தருணம் சகல விலைமனுதாரரும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தரல் வேண்டும்.

6. உரிய முறையில் மற்றும் முக்கியமான விடயங்கள் நிரப்பப்படாத கேள்விப் பத்திரம் அல்லது கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை என்னைச் சார்ந்தது.

7. மேலே குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்கப்படாத கள்ளுத் தவறணை மற்றும் வெளிநாட்டு மதுபானம் 2021.11.02 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படுவதோடு அன்றைய தினம் கேள்விப்பத்திரத்தை முன்வைக்கும்போது இவ்வர்த்தமானப் பத்திரிகையில் இரண்டாவது பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தை கையளிக்கும் நபர் “தனியாள் வரப்பிரசாதத்தை கொள்வனவு செய்துள்ள நபர் ” எனும் வெளியீட்டை வெளியிட்ட பின்னர், அன்றே பி. ப. 3.00 மணிக்கு முன்னர் என்னால் குறிப்பிடப்படும் மாதத்திற்கான குத்தகைப் பணம் போன்ற இரு மடங்கிற்கு குறையாத பணத்தொகையை பிணை வைப்பாக என்னிடம் செலுத்தி குத்தகை தொடர்பான நிபந்தனைகளுக்கு கையெழுத்திட வேண்டும்.

9. மேலதிக தகவல்கள் தேவைப்படின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

(தொ.பே.இல.031-2224633)

10. இக்கேள்வி விற்பனை தொடர்பான எனது முடிவே இறுதி முடிவாகும்.

ஏ. யு. பதிரண,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு,
2021, ஓகத்து 04.

*அட்டவணை*

| தொடர் இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | கள்ளுத் தவறணை அமைக்கப்பட வேண்டிய உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூ . ச. | கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | நீர்கொழும்பு | இல. 10 -செத்தப்பாடுவ | செத்தப்பாடுவ கிராமம் மட்டும் | மு.ப.11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2021.09.24 மு.ப. 10.30 |
| 2. | நீர்கொழும்பு | இல.11- பசியாவத்த | பசியாவத்தை கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2021.09.24 மு.ப. 10.30 |
| 3. | நீர்கொழும்பு | இல. 12 - பிட்டிபனை | பிட்டிபனை கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2021.09.24 மு.ப. 10.30 |
| 4. | நீர்கொழும்பு | இல. 15 - குரண | குரண கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2021.09.24 மு.ப. 10.30 |
| 5. | நீர்கொழும்பு | இல. 16 - காமாச்சி ஓடை | காமாச்சி ஓடை கிராமம் மட்டும் | மு. ப. 11. 00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2021.09.24 மு.ப. 10.30 |
| 6. | நீர்கொழும்பு | இல. 17 - உடையார் தோப்பு | உடையார் தோப்பு கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2021.09.24 மு.ப. 10.30 |
| 7. | நீர்கொழும்பு | இல. 18 - குடாபாடுவ | குடாபாடுவ கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 1,000 | 2021.09.24 மு.ப. 10.30 |
| 8. | நீர்கொழும்பு | இல. 19 - தலுபத்த | தலுபத்த கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 5,000 | 2021.09.24 மு.ப. 10.30 |

**அட்டவணை (தொடர்ச்சி)**

| தொடர் இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணையின் இலக்கமும் பெயரும் | கள்ளுத் தவறணை அமைக்கப்பட வேண்டிய உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. | கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 9. | நீர்கொழும்பு | இல. 20 - போருதொட்ட | போருதொட்ட கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2021.09.24 மு.ப. 10.30 |
| 10. | நீர்கொழும்பு | இல. 21 - கொச்சிக்கடை | கொச்சிக்கடை கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000 | 2021.09.24 மு.ப. 10.30 |
| 11. | நீர்கொழும்பு | இல. 22 - பலங்கதுர | பலங்கதுர கிராமம் மட்டும் | மு. ப. 11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 1,500 | 2021.09.24 மு.ப. 10.30 |

8-375/1

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரிவுக்கமைய பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர்:* வோர்ல்வைட் டிரேடிங் லங்கா (பீவீடீ) எல்டீடி
*கம்பனி இல.:* பீவி 00211452
*கூட்டிணைப்புத் திகதி:* 2019.05.05
*கம்பனியின் முகவரி :* எச்/ஜீ/எஸ்/1, மல்வான வத்த வீட்டுத் திட்டம், கொழும்பு 10

கம்பனிச் செயலாளர்.

8- 232

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பன்னிப்பிட்டிய ருக்மலே, இல. 202பீ என்ற முகவரியில் வசிக்கும் விதானகே நிமல் பெரேரா என்ற நான், சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு அதுல வலிசுந்தர அவர்களால் 2003.12.14 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 2814 என்ற பன்னிப்பிட்டிய, ருக்மலே, இல. 202 என்ற முகவரியில் வசிக்கும் விதானகே சுனில் பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணித் தத்துவ அதிகாரத்தை இல்லாதொழித்து இரத்துச் செய்யப்படுகின்றது என்பதை சகலரும் தெரிந்து கொள்வதற்காக இத்தால் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விதானகே நிமல் பெரேரா.

8-175

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கெலிஓய, பெத்தியாகொட, 96A2 வைச் சேர்ந்த அட்டுகெதர சொரஜபத்தி சிசிர பிரேமலால் ஆகிய நான், கண்டி பிரசித்த நொத்தாரிசு A.M.L.W. அத்தனாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013, செத்தெம்பர் 04 ஆந் திகதிய மாஸ்வெல, மாவெல, அட்டுகதெர சொரஜபத்தி சுசந்தா பிரேமசந்ரவிக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை 2021, ஏப்பிறல் 19 ஆந் திகதி அமுலுக்கு வருமாறு இரத்துச் செய்கின்றேன்.

இதன்பின் என் சார்பாக அவரால் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

அட்டுகெதர சொரஜபத்தி சிசிர பிரேமலால்.

8-261

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, 2020. 08.10 ஆந் திகதியிடப்பட்டு ஜெகநேசன் டமியன் சயீந்திரன் என்பவரின் பெயரில் சிவசோதி முகுந்தனும் பெண் ஜீன் லிலானி முகுந்தன் ஆகிய எங்களால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2021.08.01 ஆந் திகதி முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்துச் செய்யப்படுகின்றது. இன்று முதல் அற்றோணித்தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நாம் பொறுப்பாக மாட்டேன்.

சிவசோதி முகுந்தனும் பெண்
ஜீன் லிலானி முகுந்தன்.

2021,ஓகத்து 01.

8-277

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஜயாசிறி ஹோட்டல், ரந்தியாகம, மதுரங்குளியை வசிப்பிட மாகக் கொண்ட (தே.அ.அ.இல. 700923797V) நல்லதம்பி அற்புத ஜயாசிறி எனும் நான், ராஜபக்ஷா முதியன்செலாகே மங்கலிக்கா ராஜபக்ஷா அற்றோணி பொறுப்பாளராக நியமனம் செய்து புத்தளம் பிரசித்த நொத்தாரிசு செல்வி M.பிரசாதி தபரேரா வர்ணகுல சூரியா அவர்களால் பதிவு செய்யப்பட்டு அளிக்கப்பட்ட இல. 1286, 2013, நவெம்பர் 13 ஆந் திகதியிட்ட அற்றோணியை 2021, யூலை 20 ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்று அறியத்தருகின்றோம்.

நல்லதம்பி அற்புத ஜயாசிறி.

8-284

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கல்கிஸ்ஸை, டெம்ப்ளர்ஸ் வீதி, இலக்கம் 170/20 என்ற முகவரியில் வசிக்கும் வல்கம்பொலகே ஜுட் சுராஜ் பெரேரா ( கடவுச்சீட்டு இல. N 2702338) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு திரு. எஸ். எம். ஆர். ராமராஜா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 2077 மற்றும் 2011.01.20 ஆந் திகதியிடப்பட்டதுமான அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம், கெசெல்வத்த கொரகாண, நெளும் மாவத்தை, விதுசண இல. 142/12 என்ற முகவரியில் வசிக்கும் ரைய்கமகே சுனில் தர்மதாஸ பெரேரா ( தே.அ.அ.இல. 511773687V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவமானது 2021, ஓகத்து 04 ஆந் திகதி முதல் செல்லுபடியாகும் வண்ணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

வல்கம்பொல ஜுட் சுராஜ் பெரேரா.

8-286

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசு மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறியத்தருவது யாதெனில் 86, 1/பீ, சென்ட் பெனடிக்ட் மாவத்தை, கொழும்பு 13 இல் வசிக்கும் ஜபஸ்தியன் மாரிசன் றொட்ரிகோ ஆகிய நான், இலக்கம் 271 மற்றும் 2016.05.25 ஆந் திகதியிட்ட வழக்கறிஞர் டி. எல். ஏ. சுமுது சந்தருவன் சான்றளித்த மற்றும் பதிவாளர் பொதுத் துறை, பத்தரமுல்லை, தொகுதி 118 போலியோ 176 இல் பதிவு 7635 இல் பதிவு செய்யப்பட்ட அற்றோணி அதிகாரத்தை 18/4, கெஹல்பதன, உடுகம்பொல மேற்கு என்ற முகவரியில் வசிக்கும் கொரலகமகே மாண்டினு பத்மசிறி பெரேராவின் விருப்பத்திற்கு இணங்க இரத்துச் செய்கின்றேன்.

ஜபஸ்தியன் மாரிசன் றொட்ரிகோ.

8-306

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

பி.செ./நீர்/01/11/வெ. மதுபானம்-2022.

### நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெளிநாட்டு மதுபான தவறணைவிலைமனு கேள்விப்பத்திரம் - 2022

1982, ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள கள்ளுத் தவறணைக்கான விலைமனு நிபந்தனைகள் மற்றும் தற்போது ஏற்புடைய மதுவரி உரிமம் தொடர்பான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக கள்ளுத் தவறணை விற்பனை செய்வதற்கான கீழ்வரும் வெளிநாட்டு மதுபானத் தவறணைகளுக்கு 2022, தை மாதம் 1ஆந் திகதி முதல் 2022, மார்கழி 31 ஆந் திகதி வரையுமான தனியாள் உரிமையின் கீழ் விற்கப்படுவதற்கான விலைமனுக்கள் 2021.09.24 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

*2. சகல கேள்விகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய விலைமனுக் கேள்விப்பத்திரங்களை சரியான முறையில் பூரணமாக நிரப்பி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி வைப்புத் தொகையை செலுத்தி, பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டையும், கள்ளு விலைமனு நிபந்தனையின் பிரகாரம் பெற்றுக்கொண்டுள்ள சொத்துப் பத்திரத்தையும் ( சொத்துப் பத்திரம் தாங்கள் முன்வைக்கும் கேள்விப் பெறுமதியின் 15% க்கும் குறைவாக இருத்தல் கூடாது) அதற்குரிய உறுதியின் பிரதியையும் வழங்க வேண்டும்.*

*3. முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் முத்திரையிடப்பட்ட தபால் உறையினுள் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் "இலக்கம் ........ குறிக்கும் ................... வெளிநாட்டு மதுபானத் தவறணைக்கான விலைமனுப்பத்திரம்" என இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் விலைமனு கோரும் தவறணையின் இலக்கத்தையும் பெயரையும் தெளிவாக எழுதி 2021.09.24 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கீழே குறிப்பிட்டுள்ள அதற்குரிய கடைசி நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலிலோ பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுவதன் மூலமோ பிரதேச செயலாளருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.*

*4. விலைமனுதாரர் கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரத்தில் மேற்கொள்ளும் திருத்தங்களை விலைமனுதாரரின் முழுக் கையொப்பத்துடன் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.*

*5. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமான 2021.09.24 ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்ததன் பின் உடனே கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் சகல விலைமனுதாரர்களும் நீர்கொழும்பு பிரதேச செயலகத்திற்கு வருகை தரவேண்டும்.*

*6. உரிய முறையில் மற்றும் முக்கியமான விடயங்கள் நிரப்பப்படாத கேள்விப்பத்திரங்களை நிராகரிக்கும் உரிமை என்னைச் சார்ந்தது.*

*7. மேலே குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்கப்படாத வெளிநாட்டு மதுபானத் தவறணை 2021.11.30ஆந் திகதியன்று மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படுவதோடு அன்றைய தினம் கேள்விப்பத்திரத்தை முன்வைக்கும்போது இவ்வர்த்தமானப் பத்திரிகையில் இரண்டாவது பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.*

*8. கேள்விப் பத்திரத்தைக் கையளிக்கும் நபர் " தனியாள் வரப்பிரசாதத்தை கொள்வனவு செய்துள்ள நபர் " எனும் வெளியீட்டை வெளியிட்ட பின்னர், அன்றே பி. ப. 3.00 மணிக்கு முன்னர் என்னால் குறிப்பிடப்படும் மாதத்திற்கான குத்தகைப் பணம் போன்ற இரு மடங்கிற்கு குறையாத பணத்தை பிணை வைப்பாக என்னிடம் செலுத்தி குத்தகை தொடர்பான நிபந்தனைகளுக்கு கையெழுத்திட வேண்டும்.*

*9. மேலதிக தகவல்கள் தேவைப்படின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்துடன் தொடர்புகொள்ள முடியும். ( தொ.பே.இல. 031- 2224633).*

*10. இக் கேள்வி விற்பனை தொடர்பாக எனது முடிவே இறுதியாகும்.*

*ஏ.யு. பதிரண,*
*பிரதேச செயலாளர்,*
*நீர்கொழும்பு.*

*பிரதேச செயலகம்,*
*நீர்கொழும்பு,*
*2021. 08.04.*

**அட்டவணை**

| தொடர் இல. | பிரதேச செயலாளர் பிரிவு | கள்ளுத் தவறணை யின் இலக்கமும் பெயரும் | கள்ளுத் தவறணை அமைக்கப்படவேண்டிய உள்ளூர் பிரிவு | கள்ளுத் தவறணை திறந்திருக்க வேண்டிய நேரம் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. | கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதி திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | நீர்கொழும்பு | இல. 2 – கிறீன்பார் (வெளிநாட்டு மதுபானம்) | இல.08, பிரிவு குண்டன் வில மட்டும் | மு.ப.11.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 8.00 மணி வரை | 3,000.00 | 2021.09.24 மு.ப. 10.30 |

8-375/2

---

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

கே. டி. பி. பெரேரா மற்றும் கே. ஆர். டீ. என். பெரேரா

கணக்கு இல.: 0021 5004 4785

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.05.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.11.27 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2020.11.18ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான இருபத்தி ஏழு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தி நான்காயிரத்து அறுநூற்றி ஆறு ரூபா எழுபத்தி நான்கு சதம் (ரூபா 27,85,54,606.74) 2019, மே 03 ஆந் திகதியிலிருந்து சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், 1211 மற்றும் 1273 என்ற இலக்கங்களைக் கொண்ட ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 1,50,00,000.00) பணத்திற்காக ஆண்டொன்றுக்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், மற்றும் மேலும் இருபத்தி மூன்று கோடி பதினொரு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து பன்னிரெண்டு ரூபா இருபத்தி எட்டு சதம் (ரூபா 23,11,98,012.28) பணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate (Quarterly) + Four Per centum (4%) per annum வீதம் வட்டி, விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபதி என்பவர் மூலமாக 2021.09.10 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

வட மத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், கெந்த கோரளே மிஹிந்தல பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் குருந்தகுலம 574 ஆம் இலக்கத்தைக்கொண்ட கிராம அலுவலர் பிரிவின் குருந்துகுலமாகம கிராமத்தில் அமைந்துள்ள காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். பி. ஏக்கநாயக்கவினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள 2012, மே 06 ஆந் திகதியிடப்பட்ட 828 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் எல்லைகள் நிர்ணயித்து பிரிக்கப்பட்டு லொட் 1 என அடையாளமிடப்பட்டுள்ள காணியின் எல்லைகள் – வடக்கு: பாதைக்காக ஒதுக்கப்பட்டது; கிழக்கு: லொட் 34 காணி ; தெற்கு: லொட் 42 காணி; மேற்கு: பாதைக்காக ஒதுக் கப்பட்டது என்ற எல்லைக்குள் அமைந்துள்ள இரண்டு ஏக்கர் (2ஏ.0றூ.0பே.) விஸ்தீரணம் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங் களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட கெடிஸ்தர் வரைபடத்தின் இல. 828 க்கு

அமைய உறுதிச் சான்றிதழ் இலக்கம் LDO E 12/ 56 இல் அநுராதபுரம் காணி பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8- 313/1

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

கே. டீ. பி. பெரேரா, எஸ். எம். ரூப்பசிங்ஹ, ஜே.எம். டீ. ரீ. ஆர். செல்சியா எனும் ஜே. எம். டீ. ரீ. ராணி மற்றும் என். ரீ. பீ. ரூப்பசிங்ஹ எனும் என். ரூப்பசிங்ஹ

கணக்கு இல.: 1021 5478 2002

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.05.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.11.27 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2020.11.18ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒருகோடியே முப்பத்தி ஆறு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து இரு நூற்று இருபத்தி மூன்று ரூபா அறுபத்தி ஐந்து சதம் (ரூபா1,36,66,223.65) 2019,மே 03 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பது இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து முந்நூற்று தொண்ணூறு ரூபா அறுபத்தி ஆறு சதம் (ரூபா 50,24,390.66) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் நாற்பத்தி ஒன்பது இலட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரத்து அறுநூற்று ஐம்பத்தி நான்கு ரூபா ஐம்பத்தி நான்கு சதம் (ரூபா 49,49,654.54) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் மூன்று வீதம் (13%) மேலும் இருபத்தி ஆறு இலட்சத்து தொண்ணூற்றி ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றி எட்டு ரூபா முப்பத்தி மூன்று சதம் (ரூபா 26,95,998.33) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் நான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 401 மற்றும் 968 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக 2021.09.09 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளே துன்காஹாபத்து நீர்கொழும்பு மாநகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைகளுக்குள் எட்டுஹல் இல. 73, கிராம அலுவலர் பிரிவின் எட்டுஹல் கிராமத்தில் அமைந்த "தெவட்டகாஹாவத்த, பதுள்ளகாஹாகும்புர எனும் கிரில்லகாஹாகும்புர, காஹாகாஹாவத்த, காசத்தமரத்தடி தோட்டம் மற்றும் புன்னமரத்தடிதோட்டம்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. எம். ஜீ. டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, மே 28 ஆந் திகதி யிடப்பட்ட இல. 4017A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வீதி ; கிழக்கு: ஆறு ஆனால் இரண்டு பாதைகள் (மிகத்திருத்தமாக) ; தெற்கு : இல. 4017A எனும் வரைபடத் தின் லொட் 1 B மற்றும் மேற்கு: லொட் 1, ஆகிய இவ் எல்லை களுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினைந்து பேர்ச் (0ஏ.0றூ.15பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4017A எனும் வரை படத்திற்கு அமைவாக நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 128/106 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

313/2

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

கே. டீ. பி. பெரேரா மற்றும் ஆர். ரீ. டபிள்யூ. ஜே. எம். ஆர். என். பீ. எல். பீ. டீ. விஜயரத்ன

கணக்கு இல.: 0021 5004 4866

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.05.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில்

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.11.27 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2020.11.18ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு ஒன்பது கோடியே எழுபத்தி ஏழு இலட்சத்து எழுபதாயிரத்து இருபத்தி இரண்டு ரூபா எட்டு சதம் (ரூபா 9,77,70,022.08) 2019,மே 03 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒன்பது கோடியே இரண்டு இலட்சத்து ஐம்பத்தி மூவாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்தி நான்கு ரூபா இருபத்தி மூன்று சதம் (ரூபா 9,02,53,984.23) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate (Quarterly) + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு வீதம் (4%) விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 3100 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபதி என்பவர்கள் மூலமாக 2021.09.10 ஆந் திகதி மு.ப. 11.30 மணி முதல் இதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், கனதார கோரளேயின் (கனிஷ்ட பிரிவு) நுவரகம் பலாத்த (கிழக்கு) அநுராதபுரம் பிரதேச சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் 1 ஆவது கட்டம் (stage) இல. 249 கிராம அலுவலர் பிரிவின் அநுராதபுரத்தில் அமைந்த "எலபொட கெலே" என்றழைக்கப்படும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஏட்டு இல. 81 (அநுபந்த இல. 1) இல. ஏ. 02 எனும் இறுதி நகர வரைபடத்தின் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 342 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: FVP 523 இன் லொட் 341 மற்றும் 61 ; கிழக்கு: FVP 523 இன் லொட் 61 மற்றும் லொட்கள் 1071 மற்றும் 818 ; தெற்கு : லொட் 818, 837 மற்றும் 343 ; மற்றும் மேற்கு: லொட் 837, 343 மற்றும் 341, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் மூன்று ஒன்பது நான்கு ஒன்று ஹெக்டேயர்கள் (0.3941 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. ஏ 02 எனும் வரைபடத்திற்கு அமைவாக அநுராதபுரம் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் D 26/105 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

313/3

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

செண்ட்ரல் ஹோம்ஸ் அன்ட் ரியல் எஸ்டேட் கம்பனி (பிறைவெட்) லிமிட்டெட்

கணக்கு இல.: 0098 1000 3461

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2018.10.25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.01.18ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.01.10ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐந்து கோடியே எழுபத்தி மூன்று இலட்சத்து ஏழாயிரத்து முந்நூற்று நாற்பத்தி ஆறு ரூபா மூன்று சதம் (ரூபா 5,73,07,346.03) 2018, செத்தெம்பர் 13 ஆந் திகதி முதல் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பது இலட்சம் ரூபா (ரூபா 50,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு வீதம் (17%) மேலும் நாலு கோடியே எண்பது இலட்சத்து இருபதினாயிரம் ரூபா (ரூபா 4,80,20,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள் ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ.சேனாபத்தி என்பவர்கள் மூலமாக மேற்படி அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொத்துக்களும் அதனுடன் தொடர்புடைய வளாகமும் 2021.09.22 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும். மேலும் அட்டவணை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொத்துக்களும் அதனுடன் தொடர்புடைய வளாகமும் 2021.09.22 ஆந் திகதியன்று பி. ப. 12.30 மணி முதல் இதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

1.மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு மா நகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் மற்றும் பெரியமுள்ள இல. 158 B கிராம அலுவலர் பிரிவிற்குள் பெரியமுள்ள 2 ஆவது பிரிவில் அமைந்த வரிமதிப்பீட்டு இல. 107 ஐ ஏற்ற "கொரக்ககாஹாவத்த மற்றும் மீகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. பிரசாத் விமலசேன என்பவரால்

தயாரிக்கப்பட்ட 2016, மார்ச் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 9939 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட்1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கு : நுவன் பிரசன்ன டைட்டஸ் அப்புஹாமி மற்றும் மாகிரட் பெரேரா உரிமம் கோரும் காணி மற்றும் மாவட்ட ஊழியர் அலுவலகத்திற்கு சொந்தமான காணி ; தென்கிழக்கு : சிலாபம் வீதி ; தென்மேற்கு : சிலாபம் வீதி, வரிமதிப்பீட்டு இல. 105, எம். கே. சிவம், சிலாபம் வீதி, வரிமதிப்பீட்டு இல. 97/2, எம். எஸ். மோஹொமட், சிலாபம் வீதி, வரிமதிப்பீட்டு இல. 97/1, ஜீ. ஜீ. குணசேன மற்றும் சிலாபம் வீதி, வரிமதிப்பீட்டு இல. 97/ 3 மற்றும் 97/4, ரீ. ஜே. ரஜாப் மற்றும் ரீ. ஏ. ரஜாப் உரிமம் கோரும் காணி மற்றும் வடமேற்கு : வாஸ் பெர்னாண்டோ உரிமம் கோரும் காணி ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பதினெட்டு தசம் எட்டு நான்கு பேர்ச்கள் (0ஏ. 1றூ. 18.84பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண்அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 9939 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற் கூறப்பட்ட பெரியமுள்ள 2 ஆவது பிரிவில் அமைந்த "கொரக்ககாஹாவத்த மற்றும் மீகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச் எல் குரூஸ் தாபரே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1962, யூலை 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 415/ 1962 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கு : ஈ. டப்லியூ. டீ. சால்ஸ் அப்புஹாமி என்பவரின் காணி ; தென்கிழக்கு : சிலாபம் வீதி ; தென்மேற்கு : எஸ். எல். ஏ. வாஹிட் என்பவரின் காணி மற்றும் வடமேற்கு : டப்ளியூ. எஸ். ஹாபட் வாஸ் மற்றும் பி. பீ. பெரேரா என்பவர்களின் காணிகள் ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பத்தொன்பது தசம் ஒன்பது பேர்ச்கள் (0ஏ-1றூ 19.9பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 415/1962 எனும் வரைபடத்திற்கு அமைவாக கூறப்பட்ட நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம் / பக்கம் G 88/110 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலக்கங்கள் 3106 மற்றும் 1843 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளேயின் ராகம் பத்து ஜா - எல நகர சபை மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு எல்லைகளுக்குள் மற்றும் வெலிகம்பிட்டிய வடக்கு இல. 190/ A கிராம அலுவலர் பிரிவிற்குள் ஜா - எல இல் அமைந்த "கனுவன எஸ்டேட் தற்போது அறியப்படுவது ஜா - எல, ஒயில் மில்ஸ்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். ஜீ. ரணசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2004, யூலை 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 1986 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இல. 430 எனும் வரைபடத்தின் லொட் 01 ; கிழக்கு: இங்கமைந்த லொட் 3; தெற்கு: இங்கமைந்த லொட் 12 (11.5 மீற்றர் அகல வீதி) மற்றும் மேற்கு : இங்கமைந்த லொட் 01 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு பேர்ச்கள் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1986 எனும் வரைபடத்திற்கு அமைவாக கூறப்பட்ட கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் J 70/71 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல.1986 எனும் கூறப்பட்ட வரைப்படத்தின் லொட்கள் 12, 13 மற்றும் 14 என குறிப்பிடப்பட்ட வீதி ஒதுக்கங்கள் மற்றும் எனும் வடிகால்களும் மற்றும் ஏனைய வடிகால்களின் ஊடாகவும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளும் ஏனைய உரிமைகளுடனானது.

இல. 3566 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

கம்பனிச் செயலாளர்.

08- 311

---

**மக்கள் வங்கி - கடுகண்ணாவ கிளை**

**பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏல விற்பனை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D ஆம் பிரிவின் கீழான விற்பனை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், யட்டிநுவர கந்து பலாத்த கோரளே, யட்டிநுவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட, கடுகண்ணாவ நகர எல்லைக்குள், கடவத்கம கிராம அலுவலர் பிரிவில் கடவத்கமயில் அமைந்துள்ள, அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் டீ. ஆர். அபேகோன் அவர்களால் 2010, மாச்சு 10 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 2344 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு '01' எனக் குறிப்பிடப்பட்டுள்ள 'நிலிகமுவே கும்புர' என அழைக்கப்படும் காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 27பே.
அதிலுள்ள கட்டடங்கள் மற்றும் அனைத்தும்
உள்ளடங்கலாக கண்டி காணிப்பதிவகத்தில் தொகுதி /பக்கம்
டீ 508/235 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**காணிக்குச் சென்றடைகின்ற வழி.-** கடுகண்ணாவ நகரிலிருந்து கண்டி வீதி வழியாக பிலிமத்தலாவை நோக்கி சுமார் 750 மீற்றர் தூரம் வரை தர்மகர விகாரையை அடைந்ததும் (101 ஆவது மைல்கல்லைத் தாண்டி சுமார் 40 மீற்றர் செல்கையில், கடுகண்ணாவை நகர சபை விளையாட்டு மைதானத்திற்கு சில மீற்றர்களுக்கு முன்) பாதையின் இடது பக்கத்தில் அமைந்துள்ள குறித்த ஆதனத்தை சென்றடையலாம்.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை மக்கள் வங்கி கடுகண்ணாவைக் கிளை வளாகத்தில் மு.ப. 11.00 மணிக்கு எம்மால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID - 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏல விற்பனை நடைபெறும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** தயவு செய்து 2021, ஏப்பிறல் 23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2021, ஏப்பிறல் 23 ஆந் திகதிய ''டெயிலி நியுஸ்'', ''தினமின'' மற்றும் தினகரன் செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகத் தனித்தனியாக முழுமையாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையில் 10 % (பத்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி - விற்பனை விலையில் 1 % (ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும் ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 1,500.00;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும்;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம் .

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் முகாமையாளர், மக்கள் வங்கி கடுகண்ணாவக் கிளை என்ற முகவரியில் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி: 081- 2570705.

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படா விட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தை பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும் ஏனைய விபரங்களையும் மேற் குறிப்பிடப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
'ஒரே தேசம், ஒரே ஏல
விற்பனையாளர்,
129 வருட கால மகோன்னத
சேவை அனுபவம்.'

தலைமை அலுவலகமும் காட்சியறையும்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி : 081-2227593
பெக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு - 08
தொலைபேசி: 011-2671467, 011-2671468
பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com

இணைய தளம்: www.sandslanka.com

8- 201

---

### டீ. எவ். சீ. சீ. வங்கி பீஎல்சீ

( டிஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ பதிலாள்)
பெறுமதிமிக்க சொத்து
ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் விற்பனை

2183/ 757/ 146 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் ஈடு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்.

மத்திய மகாணம், கண்டி மாவட்டம், கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கண்டி மாநகர சபை எல்லைகளுக்கு உட்பட்ட, பஹிரவகந்த 236 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவு, பஹிரவகந்தயில் அமைந்துள்ள, நிக்கமெடித்தேஹேன என அழைக்கப்படும் (46228 ஆம் இலக்க கண்டி மாவட்ட நீதிமன்ற வழக்கின் 04 ஆம் இலக்க துண்டின் பிரிவு) , அனுமதிப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் ஆர். சி. ஓ.டி. லா மோட்டே அவர்களால் வரையப்பட்ட 1979, ஒகத்து 26 ஆந் திகதியிடப்பட்ட 2023/ A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 4E1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும், வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு.

காணியின் விஸ்தீரணம் : 00ஏ. 00றூ. 20பே. அதிலுள்ள அனைத்தும் அடங்கலாக, கண்டி காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஹனீபா பீபியின் காணியில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு அடி அகலமான பாதை உரிமையுடன்.

பிரசித்த நொத்தாரிசு எஸ். ஹப்புதந்திரி , பிரசித்த நொத்தாரிசு என். எஸ். ரணதுங்க, பிரசித்த நொத்தாரிசு பி. எஸ். அபேவிக்ரம ஆகியோரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30, 2014ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிகளிடப்பட்ட 2183/757/146 ஆம் இலக்க பிணை உறுதி மூலம், கண்டியைச் சேர்ந்த மேரி ஆன் திலீஷியா விக்கிரமசிங்க மற்றும் பத்திரவத்தே சமன் பத்திரண எனவும் பத்திரணவத்தே சமன் பத்திரண ( இதன் பின்னர் கூட்டுறவுக் கடன் பெற்றவர் என அழைக்கப்படும்) அவர்களால் டீஎப்சீசீ வங்கி பீஎல்சீக்கு ஈடு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.

டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத் தின்படி, 2021ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணிக்கு டீ எப்சீசீ வங்கி , இல. 05, தேவ் வீதி, கண்டி என்னுமிடத்தில் பகிரங்க ஏலத்தில் ஏல விற்பனைக்கு விடப்படும்.

சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள கடுமையான பணிப்புரைகளுக்கு அமைய COVID - 19 நெறிமுறைகளைப் பின்பற்றிய வகையில் ஏல விற்பனை நடைபெறும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாக செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்);
(2 ) உள்ளூராட்சி அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய 1% விற்பனை வரி 1%(ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்) மற்றும் அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ.110.000.00;
(5) எழுது வினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 1000.00;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.00 ;

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்டரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2371371 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ யின் சட்டப்பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

'முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது'.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
'ஒரே தேசம், ஒரே ஏல விற்பனையாளர்,
129 வருட கால மகோன்னத சேவை அனுபவம்.'

தலைமை அலுவலகமும் காட்சியறையும்:
24, டொரிங்டன் வீதி, கண்டி
தொலைபேசி : 081-2227593
பெக்ஸ்: 081-2224371
மின்னஞ்சல்: schokmankandy@sltnet.lk

நகர அலுவலகம்:
6A, பெயார் பீல்ட் கார்டன், கொழும்பு - 08
தொலைபேசி: 011-2671467, 011-2671468
பெக்ஸ்: 011-2671469
மின்னஞ்சல்: schokman@samera1892.com
இணைய தளம்: www.sandslanka.com

08- 202

---

**செலான் வங்கி பீ. எல்.சீ. - கடவத்தை கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

"கடன்பட்டோர் / அடமானம் வைத்தோர்" என்ற வகையில் கடவத்த வியாபார இல. W 30113 இல் "பைப் வெப் என்டபிரைசஸ்" என்ற பெயர் வடிவிலுள்ள வியாபார நிறுவனத்தின் உரிமையாளரான கடவத்தையைச் சேர்ந்த மீகமு சரத் அமரசிறி என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீ.எல். சீ. இற்கு ஈடு வைக்கப்பட்ட சொத்து.

1 ஆம் ஏல விற்பனை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், கம்பஹா பதிவுப் பிரிவிற்குள் அதிகாரி பத்து சியன கோரள மகர பிரதேச செயலாளர் பிரிவின் மகர பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹோனஹென தெற்கு இல. 286A கிராம அலுவலர் பிரிவில் ஹோனஹென கிராமத்தில் அமைந்துள்ள " ஹோனஹென எஸ்டேட்" என்று அழைக்கப்படுகின்ற காணி, அனுமதிபெற்ற நில அளவையாளர் டீ. சி. கொத்தலாவல என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.11.15 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 19/2000 துண்டு A சகலதும் குறிக்கப்பட்டு அறியப்பட்டு அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் இருபத்தேழு பேர்ச் (0ஏ.0றூ.27பே.) விஸ்தீரணத்தை மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 19/2000 துண்டு A கொண்டுள்ளது.

அத்துடன் வீதி விதிமுறைகள் விபரம் பின்வருமாறு:-

மேல் கூறப்பட்ட ஹோனஹென கிராமத்தில் அமைந்துள்ள "ஹோனஹேன எஸ்டேட்" என அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் ஏ. சி. பி. குணசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.02.21 ஆந் திகதியிடப்பட்ட நில வரைபட இல. 535 இல் துண்டு 2 சகலதும் குறிக்கப்பட்டு அறியப்பட்டு அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் எட்டு தசம் ஐந்து சைபர் பேர்ச் ( 0ஏ. 0றூ.8.50பே.) விஸ்தீரணத்தை மேற்கூறப்பட்ட நிலவரைபட இல. 535 இல் துண்டு 2 கொண்டுள்ளது.

மேல் கூறப்பட்ட ஹோனஹென கிராமத்தில் அமைந்துள்ள "ஹோனஹேன எஸ்டேட்" என் அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் ஏ. சி. பி. குணசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992.06.02 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 535A இல் துண்டு 13 சகலதும் குறிக்கப்பட்டு அறியப்பட்டு அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் இருபது தசம் ஒன்பது சைபர் பேர்ச் ( 0ஏ. 0றூ.20.90பே.) விஸ்தீரணத்தை மேற்கூறப்பட்ட நில வரைபட இல. 535A துண்டு 13 கொண்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு பி. ஏ. எம். ஐ. விஜயவிக்கிரமவினால் 2007, மாச்சு 26 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட அடமானப் பத்திர இல. 3210 , நொத்தாரிசு ஐ. டீ. குணதிலக்கவினால் 2002, பெப்புருவரி 12 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட அடமானப் பத்திர இல. 352 ஆகிய சொத்து அடமானம் வைக்கப்பட்டுள்ளது.

மேலே விபரிக்கப்பட்டுள்ள சொத்தை 2021, செத்தெம்பர் 03 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு செலான் வங்கி பீஎல்சீ கடவத்தை கிளை வளாகத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.-** இந்த சொத்து கொழும்பு கண்டி வீதியால் ரன்முத்துகல சந்தியிலிருந்து கண்டி நோக்கி செல்கையில் கடவத்தை நகரைக் கடந்ததும் சிறிது தூரத்தில் ஹோனஹென வீதி மாவர மண்டியை நோக்கிச் செல்லும் அங்கிருந்து 2.6 கி.மீ. சென்றதும் அந்த வீதியின் வலது பக்கத்தில் 20 அடி அகலமான பாதை ஜெயக்கொடி மர ஆலை முன்னால் செல்லும். அங்கிருந்து 50 மீ. சென்று வலது பக்கமாக உள்ள Y சந்தியால் திரும்பி சுமார் 75 மீ. தூரம் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து மிக பெரிய வியாபார தளத்தின் இடது பக்கத்தில் அமைந்திருக்கும்.

2 ஆம் ஏல விற்பனை

